**அனுப்புநர்**

திரு.M.இராமசாமி, M.Sc., M.Phil., B.Ed.,
இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 094863 / எச்.1 / 2019 நாள்: 18.11.2019**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மார்ச் 2020, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு – பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து சரிபார்த்துக் கொள்ளுதல் – சார்பு.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள். 03.09.2019, 06.09.2019 மற்றும் 19.09.2019

*********

பார்வையில் காணும் கடிதங்களில் மார்ச் 2020, மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணாக்கரின் விவரங்களடங்கிய பட்டியலில் மாணாக்கர் பெயர் சேர்த்தல் (Transfer) மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள 12.09.2019 முதல் 20.09.2019 வரை வாய்ப்பு வழங்கப்பட்டது. முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் மேற்கொள்ள இயலாத சேர்க்கை / பயிற்றுமொழி தொடர்பான திருத்தங்களைப் பட்டியலிட்டு 20.09.2019–ம் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

அதற்கிணங்க, மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலையும், அதில் மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணாக்கருக்கு தோல்வியுற்ற பாடங்களை மீண்டும் தேர்வெழுதும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலையும் அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 18.11.2019 முதல் 22.11.2019 வரையிலான நாட்களில் மட்டும் அரசுத் தேர்வுகள் இணையதளத்திற்கு (www.dge.tn.gov.in) சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து பெயர்ப்பட்டியலை சரிபார்த்துக் கொள்ளுமாறு தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**பெயர்ப்பட்டியலில் மாணாக்கர் பெயர் ஏதும் விடுபட்டிருப்பின் அவ்விவரத்தினை முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் இவ்வலுவலகத்திற்கு 25.11.2019–க்குள் நேரில் வந்து ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதன்பிறகு எக்காரணத்தைக் கொண்டும் கூடுதலாக பெயரை பெயர்ப்பட்டியலில் சேர்க்க இயலாது.**

இத்துறையால் நடத்தப்பட்ட மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத்தேர்வினை எழுதாமல், 2017–2018–ஆம் கல்வியாண்டிற்கு முன்னர் மேல்நிலை முதலாமாண்டு படித்து தேர்ச்சி பெற்ற மாணாக்கர், பிற மாநிலங்களில் மற்றும் CBSE பாடத்திட்டத்தில் +1 பயின்று தேர்ச்சி பெற்று தற்போது +2 படித்து வரும் மாணாக்கரின் பெயர், பதிவெண் போன்ற விவரங்கள் மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு (+2) மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் இடம்பெற்றிருக்காது எனவும், அரசிடமிருந்து இப்பொருள் குறித்து அரசாணை பெறப்பட்டவுடன் பதிவெண் வழங்கப்படுமெனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**ஒம்./–**
**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**நகல்:**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள்.